# அருணாச்சலப் பிரதேசம் தொடர்பாக சீன பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறிய கருத்துகள் குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அளித்த பதில்.

மார்ச் 19, 2024

**அருணாச்சலப் பிரதேசம் தொடர்பாக சீன பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் கூறிய கருத்துகள் குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு, அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் அவர்கள் அளித்த பதிலானது:**
"இந்திய மாநிலமான அருணாச்சலப் பிரதேசத்தின் மீது அபத்தமான உரிமைகோரல்களை முன்வைக்கும் சீன பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட கருத்துகளை நாங்கள் கவனித்துள்ளோம். இது தொடர்பாக ஆதாரமற்ற வாதங்களை மீண்டும் செய்வது அத்தகைய உரிமைகோரல்களுக்கு எந்தவிதமான செல்லுபடியையும் வழங்காது. அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதியாக இருந்தது, எப்போதும் இருக்கும். அங்கு நமது வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களால் அதன் மக்கள் தொடர்ந்து பயனடைவார்கள்" என்று அவர் கூறினார்.

**புது தில்லி**
**மார்ச் 19, 2024**